## ஆண்டவருடைய பிறப்பு
## விடியல் திருப்பலி

**எசா 62, 11 -12; தீத் 3, 4 -7; லூக் 2, 15 -20**

### பகிரப்படும் அன்பின் வழியாக மலரும் மீட்பரின் மகிழ்ச்சியும் அமைதியும்

### முன்னுரை

கிறிஸ்துவில் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே,

இறைவனின் சுடர் வீசும் அன்பு வெளிப்படும் இந்த ஒளிமயமான காலை திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறேன்.

ஒரு சிறிய நகரத்தில் குளிரான இரவில் மின்சாரம் தடைபட்டது. எங்கும் இருள் சூழ்ந்தது. ஒரே ஒரு வீட்டில் மட்டும் வெளிச்சம் இருந்தது. அந்த வீட்டில் மட்டும் எப்படி வெளிச்சம் இருக்கிறது என்பதை பார்க்க அக்கம்பக்கத்தார் வந்தார்கள். அந்த வீட்டில் இருந்தவர்கள் குளிருக்காக மூட்டிய நெருப்பை சுற்றி அமர்ந்து இதமாக பாடிக் கொண்டிருந்தார்கள். வீட்டின் தந்தை முகமலர்ச்சியோடு சொன்னார் "வீட்டில் அன்பிருந்தால் அங்கு எப்போதுமே வெளிச்சம் இருக்கும்." கிறிஸ்து பிறப்பு விழா காலை திருப்பலி நமக்குத் தரும் செய்தியும் இதுதான். இறைவன் இந்த உலகத்தில் இருந்த இருளை, தனிமையை, பயத்தை, பாவத்தால் உறைந்து போன உள்ளங்களை கண்டபோது ஒரு அணையா நெருப்பை மூட்டினார். அந்த நெருப்பு நமக்காப் பிறந்த அவருடைய திருமகன் இயேசு. அவர் நம்முடைய பலவீனங்களை பகிர்ந்து கொண்டு அன்பின் ஒளியை நம் இருளில் ஏற்றுகிறார். அன்பை பகிர்வதால் அமைதி மலர்கிறது என்ற செய்தியோடு நம்மோடு வாழவரும் நமது மீட்பருக்கு நம் இதயக் கதவுகளை திறந்துவைப்போம்.

### மறையுரை

### 1. பகிரப்பட்ட அன்பின் கதை

சில ஆண்டுகளுக்கு முன்பாக புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒரு சிறுவனுக்கு அதற்காக வழங்கப்பட்ட சிகிச்சையில் தலையில் உள்ள முடி அனைத்தும் உதிர்ந்ததுவிட்டது. பள்ளிக்குச் சென்றால், மற்ற மாணவர்கள் கேலி செய்வார்களே என்று நினைத்த அவன், பள்ளிக்கு செல்வதற்கு பயந்தான். அவனுடைய பெற்றோர்கள் அவனுக்கு செயற்கையான முடி அல்லது தொப்பி வைத்து அதனை மறைக்க முயன்றார்கள். ஆனால் சிறுவன் ஒரு தொப்பியை மட்டும் வைத்துக் கொண்டான். என்ன நடக்குமோ என்ற உணர்வோடு நடுங்கிக் கொண்டே , வகுப்பறைக்குள் நுழைந்தான். நுழைந்தவன் அப்படியே ஆச்சரியத்தில் உறைந்து போனான். ஏனென்றால் பள்ளியில் இருந்த ஒவ்வொரு சிறுவர்களும் மொட்டை அடித்திருந்தார்கள். அவன் தனியாக இல்லை என்பதை அவன் உணர வேண்டும் என்பதற்காகவே இப்படி செய்தார்கள். அவர்களுடைய இந்த புரிந்துணர்வு ஒரு அழகான செய்தியை தருகிறது: உன்னுடைய துன்பத்தை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்; நாங்கள் உன்னை அன்பு செய்கிறோம். இதுதான் கிறிஸ்துமஸ். கிறிஸ்து மனுவுருவானார் என்பதன் பொருள் இதுதான். நம்முடைய வலியை, தனிமையை, பாவத்தை பார்த்த கடவுள், நம்மவிட்டு தொலைவில் நின்று கொள்ளவில்லை. அவர் மனித வரலாற்றில் நுழைந்தார். நம்மைப் போல எலும்பும் சதையும் கொண்டவராக உருவெடுத்து நம்முடைய கண்ணீரை, பசியை, இறப்பை அவரும் பகிர்ந்து கொண்டார். அதனால் தான் தூய யோவான் நற்செய்தியாளர் கிறிஸ்துமஸ் என்பதை

இரத்தின சுருக்கமாக குறிப்பிடுகின்றார் "தம் ஒரே மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா 3:16).

## 2. கிறிஸ்துமஸ்விடியலின் செய்தி

இந்த காலை திருப்பலி நமது மீட்பரிடம் வர, நம்மை அழைக்கிறது. நிலையான அமைதியும் விண்ணக மகிழ்ச்சியும் அவரே. அன்பை பகிர்ந்து வாழ்வதால் அந்த மகிழ்ச்சியும் அமைதியும் நமக்கு கிடைக்கும். எருசலேம் பாழடைந்துள்ளது. அதனைக் காப்பாற்றி மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரும் ஆண்டவரின் **அன்பு**, அதன் மீது ஒளிர்கிறது என்று எசாயா இறைவாக்கினர் முன்னுரைத்தார். பவுல் அதனை **இரக்கம்** என்று குறிப்பிடுகின்றர். அது நமக்கு வழங்கப்படுகின்றது. திருமுழுக்கு வழியாக மறுபிறப்படைந்து முடிவில்லா வாழ்விற்கான வாரிசுகளாக, நமக்கு அந்த இரக்கம் அருளப்படுகின்றது. மாட்டுத் தொழுவம், தீவனத் தொட்டி, இறைவனின் இந்த மாபெரும் அன்புச் செய்தியை முதலில் பெற்ற இடையர்கள், போன்ற எளிமையான பாத்திரங்களின் வழியாக லூக்கா இதனை நமக்கு வெளிப்படுத்துகின்றார்.

## 3. இடையர்கள் - அன்பின் தூதுவர்கள்

பெத்லகேமில் வாழ்ந்த இடையர்கள் சுத்தமாகவோ, மரியாதைக்குரியவர்களாகவோ இல்லை. அவர்கள் மேல் தட்டு சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களாக, அருவெறுக்கப்பட்டவர்களாக, அன்றைய சமய நெறிகளை கடைபிடிக்க முடியாதவர்களாக இருந்தார்கள். இருந்த போதிலும் வானகத் தூதரணிகளின் வாழ்த்தொலியை அவர்கள்தான் முதலில் கேட்டார்கள். கடவுள் திட்டமிட்டே அவர்களை தேர்ந்து கொண்டார். கிறிஸ்து பிறப்பு செய்தி மேல் தட்டு மக்களுக்கு அல்ல, மாறாக அது மறக்கப்பட்டவர்களுக்கும், ஏழைகளுக்குமானது. அது வசதியானவர்களுக்கானதல்ல, மாறாக தங்களுக்கு ஒரு மீட்பர் தேவை என்பதை உணர்ந்தவர்களுக்கே. ஒருவேளை இந்த இடையர்கள் மேய்த்தது, ஆலயத்தில் பலியிடப்பட வேண்டிய ஆட்டுமந்தையாக இருந்திருக்கலாம். அப்படி என்றால், உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியை முதலில் பார்ப்பதற்கு மிகவும் தகுதியானவர்கள் அவர்களே. "அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார், என்று வானகத் தூதர் அவர்களுக்கு அறிவித்தார். இதை கேட்ட இடையர்களின் செயல் எளிமையானதாகவும் ஆழமான அர்த்தமுள்ளதாகவும் இருந்தது. அவர்கள் விரைந்து சென்று, குழந்தையைக் கண்டு ஆராதித்தார்கள்.

பின்பு அந்த செய்தியை பிறருக்கு அறிவித்தார்கள். இந்த இறைவனின் அன்பை பெற்றுக் கொண்டது மட்டுமல்ல, அதை பகிர்ந்து கொண்டார்கள். இவ்வாறாக அவர்கள் கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கும் முதல் நற்செய்தியாளர்களாக, அப்போஸ்தலர்களாகுகிறார்கள் .

## 4. அமைதியைப் பகிர அழைக்கும் வான தூதரின் பாடல்

இயேசு பிறந்த போது, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!" என்று வானக தூதர்கள் பாடினார்கள். யூத பாரம்பரியத்தில் ஒரு ஆண் குழந்தை பிறக்கின்ற போது அந்த வீட்டின் முன்பாககூடி பாடல்கள் இசைப்பது வழக்கம். ஆனால் பெத்லகேமில் யாரும் பாட வரவில்லை. அதனால் விண்ணகப் பாடல் குழு மண்ணகம் வந்தது. உலகம் அங்கு ஏழ்மையை கண்டது; வானகம் அங்கு மேன்மையை கண்டது; பூமியில் வரவேற்பு இல்லாதபோது,

வான் வீட்டின் கதவுகள் திறந்தன. உலகத்தில் அமைதி உண்டாகுக என்பது போர்கள் இல்லாத அமைதியை குறிக்கவில்லை, மாறாக மனித இதயங்களில் மலர்ந்து தாராளமாக வழிந்தோடும் அன்பை குறிக்கிறது. அன்பை பகிர்ந்து கொள்பவர்களால் மட்டுமே இந்த அமைதியை பெற முடியும். இருள் சூழ்ந்த ஒருவரின் வாழ்வில் ஒளி ஏற்றும் நம்முடைய அன்பு, ஆறாத மனக்காயங்களை ஆற்றும் நம்முடைய பொறுத்தருளும் குணம், அன்புக்காக ஏங்குபவர்களுக்கு நாம் காட்டும் அன்பு இவற்றில் தான் வானகத் தூதர்கள் பாடிய பாடல் உண்மையானதாகிறது.

## 5. போலியான மீட்பரும் உண்மையான மீட்பரும்

வரலாறு பல போலியான மீட்பர்களை பார்த்துள்ளது.

- அறிவின் வழியாகயாக விடுதலையை பெறலாம் என அறிவித்த மெய்யியலார்கள்.
- அதிகாரத்தின் மூலமாக சொர்க்கத்தை அடையலாம் என அறிவித்த அரசியல்வாதிகள்.
- புரட்சி வழியாக விடுதலை அடைய முடியும் என்ற வாக்குறுதியை தந்த இயக்கங்கள்.
- தொழில்நுட்பம், செல்வம், இவற்றின் வழியாக அமைதியை அடைய முடியும் என அறிவித்த நவீன கால இறைவாக்கினார்கள்.

ஆனால், இவர்களில் எவருமே நிலையான அமைதியையோ அல்லது மகிழ்ச்சியையோ ஏற்படுத்தவில்லை. உண்மையான அமைதியும் மகிழ்ச்சியும் இயேசு கிறிஸ்துவின் வழியாக பகிரப்படும் அன்பினால் மட்டுமே உண்டாகிறது. இயேசு நம்மை கட்டாயத்தினால் அல்ல மாறாக தனது கனிவினால் விடுதலையாக்குகிறார்; நமக்கு வெளியில் இருந்தல்ல, நமக்குள் இருந்து செயலாற்றுகிறார். மனிதகுலம் என்னும் மாட்டுத் தொட்டியில் தவழ்ந்து, அதன் உள்ளிருந்து அதனை உருமாற்றுகிறார் என்பதை பின்வரும் குட்டிக்கதை நமக்கு விளக்குகிறது.

ஒரு ஏழைப் பெண் தன்னை பார்க்க வந்த அருள் பணியாளரிடம், "இயேசுவுக்கு கொடுக்க என்னிடம் எந்த பரிசும் இல்லை" என்று சொன்னார். அதற்கு அந்த பணியாளர், " நீங்கள் அவருக்கு உங்களை கொடுங்கள், உங்கள் வழியாக அவர் தன்னை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பார்".

கிறிஸ்து பிறப்பு விழா மகிழ்ச்சியின் இரகசியம் இது தான்: நமக்குள் இருக்கும் மீட்பரை பிறரோடு பகிர்ந்து கொள்வது.

## 6. பயத்திலிருந்து மகிழ்ச்சியை நோக்கிய இடையர்களின் பயணம்

இடையர்கள் முதலில் பயந்தார்கள். அஞ்சாதீர்கள் என்ற வானக தூதரின் வார்த்தையை கேட்டபோது அவர்களுடைய பயம் நம்பிக்கையாக மாறியது. நாமும் பெத்லகேம் போவோம், என்ற வார்த்தைகள் அவர்கள் பயத்தை பயணமாக மாற்றியது. நாங்கள் ஆண்டவரை கண்டோம் என்று அவர்கள் அறிவித்தது, அவர்களது பயத்தை சான்றுகளாக மாற்றியது.

அவர்களது பயணம் நமது பயணத்தை பிரதிபலிக்கிறது. கிறிஸ்து பிறப்பு விழா நம்மை பயத்தில் இருந்து நம்பிக்கைக்கும், பெற்றுக் கொண்ட அன்பை பகிர்ந்துகொள்ளவும் அழைக்கிறது. பெத்லகேமிலிருந்து பிறந்த அமைதி நம் உள்ளங்களில் மட்டும் தங்கி விடக் கூடாது; அது நம் இல்லங்களிலும் , நமது பங்கிலும் , நமது சமுதாயத்திலும் பொங்கி பெருகிட வேண்டும்.

## 7. வாழ்க்கைக்கான பாடம்: கிறிஸ்துவை தன்னகத்தே கொண்டவர்களாகவும், பிறருக்கு கொடுப்பவர்களாகவும் இருப்போம்.

"உலகில் உள்ள ஆயிரக்கணக்கான குடில்களில் இயேசு பிறந்தும்,

என் இதயக் குடிலில் பிறக்காவிட்டால், அதனால் எனக்கு என்ன இலாபம்?" என்று அலெக்சாண்டர் போப் என்ற கவிஞர் ஒருமுறை எழுதினார். ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பு விழாவும், நம்மை பெத்லகேம் ஊராகமாறி - நமது பெருந்தன்மை, பொறுமை, இரக்கம் போன்ற பண்புகளின் வழியாக இயேசுவை மீண்டும் புதிதாக பிறக்க வைக்க அழைப்பு விடுக்கின்றது.

- தனிமையில்வாடும் ஒருவரோடு நமது நேரத்தை செலவிடுவது;
- நமக்கு எதிராக தவறு செய்தவர்களை மன்னிப்பது;
- கைவிடப்பட்ட வரை அல்லது நோயாளரை சந்திப்பது;
- காயப்படுத்தாத, குணமளிக்கக் கூடிய வார்த்தைகளை பேசுவது.

மேற்கண்ட செயல்களின் வழியாக நாமும் இக்காலத்திற்கேற்ற இடையர்களாக மாறலாம்.

இடையர்களைப் போல நாமும் இக்குழந்தையை ஆராதிப்பதோடு மட்டுமல்லாமல், அவரை அறிவிப்பவர்களாகவும் இருக்க அழைக்கப்படுகிறோம். கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி அதைப் பகிரும் போது தான் பலுகிப் பெருகுகிறது.

## 8. இறுதியாக வெறுமையான நாற்காலி

கிறிஸ்து பிறப்பு நாளன்று காலையில் தங்கள் வீட்டில் உள்ள மேசையைச் சுற்றி போட்டிருந்த நாற்காலிகளில் ஒன்று காலியாக இருப்பதை அந்த வீட்டுச் சிறுமி பார்த்தாள். அவளது தந்தை, " ஆப்பிரிக்காவில் மறை போதகராக பணியாற்றுகின்ற உன்னுடைய மாமாவிற்கான இருக்கையது. ஒவ்வொரு வருடமும் நாம் அதை அவருக்காக ஒதுக்கி இருக்கிறோம்" என்று அந்த சிறுமியிடம் கூறினார். அந்தச் சிறுமி ஒரு நிமிடம் யோசித்து விட்டு தன்னுடைய சாப்பாட்டு தட்டை அந்த இருக்கையின் மீது வைத்து விட்டுச் சொன்னார்: இன்றைக்கு இயேசு வந்தால் அவர் அங்கே அமர வேண்டும் என்று விரும்புகின்றேன்.

அன்பான சகோதர சகோதரிகளே,

கிறிஸ்து பிறப்பு விழாவின் உண்மையான அதிசயம் என்னவென்றால் இன்றும் இயேசு வருகிறார்; ஆடம்பர உடைய அணிந்து அல்ல மாறாக உங்கள் அன்பிற்காக ஏங்குகின்ற பசியில், தனிமையில், அகதியாய், அடுத்திருப்போராய், குழந்தையாய், நோயாளராய் வருகிறார். இவர்களுக்கு நாம் இடம் கொடுத்தால் இறைவனுக்கே இடம் கொடுக்கிறோம். நாம் அன்பை பகிரும்போது அவரது அமைதியை பகிர்கிறோம். இடையர்களைப் போல நாமும் நமது வாழ்வால் கடவுளை புகழ்ந்து மாட்சிப்படுத்தும் போது "உன்னதத்திலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக உலகிலே அவருக்கு உகந்தவர்களுக்கு அமைதி உண்டாகுக" என்று அன்று வானகத் தூதர்கள் பாடிய பாடல் இன்று நமதாகும்.

ஆமென்.

தயாரிப்பு :

அருள் முனைவர் பால் ஜூலியன், ஆஸ்திரேலியா

மேலும் விவரங்களுக்கு காண்க....

www.virginofrevelationaustralia.com